திருச்சி சிவா எம்.பி. கண்டன உரை! மக்கள் நலப் பணிகளை முடக்கும்

த.வெ.க. அரசின் நிர்வாகச் சீர்கேடு: இன்று கண்டன ஆர்ப்பாட்டம்!

சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, அக்.15- “எல் நினோ” மழையின் தீவிர அபாயங்களை அலட்சியப்படுத்தியும் - மாநகராட்சி பிரதிநிதிகளின் மக்கள் நலப் பணிகளை முடக்கும் த.வெ.க. அரசின் நிர்வாகச் சீர்கேட்டையும் கண்டித்து “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!” நடைபெறுகிறது என சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு, எம்.எல்.ஏ., அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:-

எல் நினோ தீவிரம் மற்றும் வடகிழக்குப் பருவமழை அபாயங்களை அலட்சியப்படுத்துவதையும், மாநகராட்சி மக்கள் பிரதிநிதிகளின் மக்கள் நலப் பணிகளை முடக்கும் த.வெ.க. அரசின் நிர்வாகச் சீர்கேட்டையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

மேயர் பிரியா ராஜன் தலைமையில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழகத் துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற மாநிலங்களவை குழு தலைவர் திருச்சி என்.சிவா எம்.பி., சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ., சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம், சென்னை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ஆர்.டி. சேகர், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்பி, கழக அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம் பி. ஆகியோர் கண்டன உரையாற்றுகின்றனர்!



எல் நினோ தீவிரம் மற்றும் வடகிழக்குப் பருவமழையால் ஏற்படக்கூடிய அபாயங்களை அலட்சியப்படுத்துவதையும், மாநகராட்சி மக்கள் பிரதிநிதிகளின் மக்கள் நலப் பணிகளை முடக்கும் தமிழக அரசின் நிர்வாகச் சீர்கேட்டையும் கண்டித்து, இன்று (15.10.2026 - வியாழக் கிழமை) காலை 9.00 மணியளவில், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் பொது மக்கள் பாதிக்கப்படாமல் பாதுகாக்கும் வகையில், மழைநீர் வடிகால்களைத் தூர்வாருதல், கழிவுநீர் கால்வாய்களில் ஏற்பட்டுள்ள அடைப்புகளை அகற்றிச் சீரமைத்தல், கூவம் ஆற்றின் முகத்துவாரப் பகுதிகளில் நீரோட்டத் தடைகளை அகற்றுதல், மழைநீர் தேங்கும் தாழ்வான பகுதிகளில் உரிய முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட அத்தியாவசியப் பணிகளைப் போர்க்கால அடிப்படையில் விரைந்து நிறைவேற்ற வலியுறுத்தியும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகராட்சி மக்கள் பிரதிநிதிகள் தங்களது மக்கள் நலப் பணிகளைத் தடையின்றி மேற்கொள்ள வழிவகை செய்ய வலியுறுத்தியும் இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

மேலும், இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் இரா. கிரிராஜன் எம்.பி., ப. தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், அ. வெற்றியழகன், இ.பரந்தாமன், ப. ரங்கநாதன், கே.எஸ். ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, டாக்டர் ஏ.பி. பூர்ணிமா, கார்த்திக் மோகன்,எஸ். மணிமுடி, வே. உமாகாந்த், பி.கே. மூர்த்தி, கே.எஸ். எம். நாதன், எம். விஜய குமார், கே. சந்துரு, சி. மகேஷ்குமார், என். பி.எம். ஷேக் அப்துல்லா, ராஜேஷ் ஜெயின், ஆர். வரதன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

மாவட்டக் கழக நிர்வாகிகள்: தேவஜவகர், ஜி.எம். தேவன், புனிதவதி எத்திராஜன், இசட். ஆசாத் ஆகியோரும்,

பகுதிக் கழகச் செயலாளர்கள்: எஸ். ராஜசேகர், எஸ். முரளி, சொ. வேலு, வி. சுதாகர், கூ.பீ. ஜெயின், வே. வாசு, ஐ. சி.எப். வ. முரளிதரன், எ. நாகராஜன், டி.எஸ். பி. ராஜகோபால், எம். டி.ஆர். நாகராஜ், செ. தமிழ்வேந்தன், எம். சாமிக்கண்ணு ஆகியோரும்,

பொதுக்குழு உறுப்பினர்கள்: எஸ். பன்னீர் செல்வம், டி.வி. செம்மொழி, சாவித்திரி வீரராகவன், கோ. மணி, பி. உதயசங்கர், சரிதா மகேஷ்குமார், ரமேஷ் (எ) நீலகண்டன், அ. நிர்மலாதேவி, எம். இப்ராஹிம் கனி, இரா. கலைச்செல்வி ஆகியோரும்,

மாவட்டச் சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்: வானவில் விஜய், பா. ஜெகதீஷ், ஜெ. பாலமுருகன், ஜி.ஜே. பிரபு, கே. வினோத், எஸ். தனசேகர், நா. ரஞ்சித் விஜயாலயன், எல்.பி.எஃப். மோகன், ஜி. தாமோதரன், நா. துலுக்கானம், கு. கிருஷ்ண மூர்த்தி, ஆர்.எஸ். சித்திக், இரா. வீரமணி, பி. விஜயகுமார், பா. பிரதீப்குமார், எல். சம்பத்குமார், ம. அசோக்குமார், எம். விநாயகம், சுதாதினதயாளன், ராஜேஸ் வரி ஸ்ரீதர், ஜி. சாந்தகுமாரி, எம். பெரோஸ் கான், க. ராஜாமுகமது ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலைக்குழுத் தலைவர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள், மாநகர மன்ற உறுப்பினர்கள், வட்டகழகச் செயலாளர்கள், பகுதி/வட்டகழக நிர்வாகிகள், செயல்வீரர்கள், முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு கண்டனத்தைப் பதிவு செய்ய உள்ளனர்.

மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்யவும், பருவமழை முன்னெச்சரிக்கைப் பணிகளை விரைந்து நிறைவேற்றவும், மாநகராட்சி மக்கள் பிரதிநிதிகளின் மக்கள் நலப் பணிகளுக்கு ஏற்பட்டுள்ள தடைகளை நீக்கவும் வலியுறுத்தி நடைபெறும் இம்மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் அனைவரும் பெருந்திரளாகக் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு சென்னை கிழக்கு- வடக்கு- வடகிழக்கு மாவட்ட திமுக சார்பில் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.

தலைமைக் கழக அறிவிப்பு!

கழக மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் தமிழ் கா.அமுதரசன் அவர்கள் அவர் வகித்து வந்த பொறுப்பில் இருந்து விடுவிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 13.10.2026

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

நிலக்கோட்டை ஆ. முனியாண்டி
அக்டோபர் 15 (1992)



தனது இளமைக் காலம் முதலே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

நிலக்கோட்டை ஒன்றியத்தில் உள்ள தனது சொந்த ஊரான விளாம்பட்டியில் கழகக் கிளையை துவக்கி, அப்பகுதி முழுவதும் கழகத்தை வளர்த்தவர்.

திண்டுக்கல் மாவட்ட துணைச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

1962–ல் நடைபெற்ற விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்திலும், 1963–ல் மதுரையில் இந்தி திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்திலும் கலந்து கொண்டு 2 ஆண்டுகளுக்கு மேலாக சிறைவாசம் அனுபவித்தவர்.

நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் 1967, 1971 ஆகிய ஆண்டுகளில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; வெளிமார்க்கெட்ல அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்கறதப் பற்றி தி.மு.க.தான் தேவையில்லாமல் விமர்சனம் செய்யுதுன்னு ‘கலக்சன்’ குமார் பேசி இருக்கிறாரே... எல்லா கட்சிகளும் தானே கண்டிச்சிருக்கு.

பட்டணம் : **ஆமாமய்யா; எல்லா கட்சிகள் மட்டுமல்ல; த.வெ.க. கூட THIS IS NOT ACCEPTABLE’ன்னு பதிவிட்டுவிட்டு, முன்கூட்டியே மின்தட்டுப் பாட்டை கணித்து நடவடிக்கை எடுத்திருக்க வேண்டாமான்னு அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் சமூக வலைதளப் பதிவில் கேட்டிருந்ததா ஞாபகம்!**

மாநகராட்சிப் பிரதிநிதிகளின் மக்கள் நலப்பணிகளை முடக்கும்

த.வெ.க. அரசின் நிர்வாகச் சீர்கேட்டைக் கண்டித்து இன்று ஆர்ப்பாட்டம்!

ஆர்.எஸ்.பாரதி தலைமை! சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னை, அக்.15 - “எல் நினோ” மழையின் தீவிர அபாயங்களை அலட்சிப்படுத்தியும் - மாநகராட்சி பிரதிநிதிகளின் மக்கள் நலப் பணிகளை முடக்கும் த.வெ.க. அரசின் நிர்வாகச் சீர்கேட்டையும் கண்டித்து “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!” என சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:-

உலக அளவில், எல் நினோ பொதுவாக வறட்சியை ஏற்படுத்தும் என்றாலும், 2026-ஆம் ஆண்டின் அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் தமிழ்நாட்டில் சில பகுதிகளில் இயல்பைவிட மிக அதிக அளவில் மழைப்பொழிவு மற்றும் வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்புள்ளதாக வானிலை நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். அதோடு, கோடை வெப்பம், குடிநீர் பற்றாக்குறை மற்றும் கடலோர அரிப்பு போன்ற பேரிடர்களையும் எதிர்கொள்ள தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி தமிழ்நாடு அரசுக்கு வல்லுநர் குழு பரிந்துரை செய்துள்ளது.

ஆனால், ‘ரீல்ஸ் ஆட்சி நடத்தி வரும் த.வெ.க. அரசு’ இப்பேரிடர் குறித்து கிஞ்சித்தும் கவலை கொள்ளாமல், முன்னெச் சரிக்கை நடவடிக்கை எதுவும் எடுக்காமல் இருந்து வரும் நிலையில்,

‘வருமுன் காப்போம்’ என்ற கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தாரக மந்திரத்தின் அடிப்படையில், மக்கள் மீது அக்கறையின்றி குறட்டை விட்டு தூங்கும் அரசான ஆளும் த.வெ.க. அரசினை தட்டியெழுப்பும் வகையில்,



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநகராட்சி பிரதிநிதி களின் மக்கள் நலப் பணிகளை முடக்கியும் வரும் தமிழ்நாடு அரசின் நிர்வாகச் சீர்கேட்டை கண்டித்து, சென்னை தெற்கு - சென்னைமேற்கு - சென்னை தென்மேற்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் இன்று (15.10.2026, வியாழக் கிழமை) காலை 10.00 மணியளவில் சென்னை, சைதாப்பேட்டை, ‘கலைஞர் பொன்விழா வளைவு” அருகில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்”, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் தலைமையில், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மா. சுப்பிரமணியன், சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு - சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் த.வேலு, கழக கல்வியாளர் அணிச் செயலாளர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், எம்.பி., - சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலைக்குழு தலைவர்கள் - மண்டலக்குழு தலைவர்கள்- மாநகர்மன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ள நடைபெறும்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், சென்னை தெற்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, மாற்றுத் திறனாளிகள் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, கல்வியாளர்கள் அணி ஆகிய அனைத்து அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மா.சுப்பிரமணியன் அறிவித்துள்ளார்.



எஸ்.ஐ.ஆர். முறைகேடுகளைக் கண்டித்து, தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் பதவி விலகக் கோரி நாடு முழுவதும் காக்ரோச் ஜனதா பார்ட்டி (CJP) சார்பாக நடைபெறும் இளைஞர்களின் போராட்டத்திற்கு தமிழ்நாட்டில் அரசு அனுமதி வழங்க மறுப்பதை அடுத்து அந்த இளைஞர்கள் ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.கழக அலுவலகத்தில் கண்களில் கருப்புத் துணி கட்டி உள்ளிருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் கோவை மாநகர மாவட்டக் கழகச் செயலாளர் துரை. செந்தமிழ்ச்செல்வன், சிவானந்தா காலனி பகுதிச் செயலாளர் டெம்போ சிவா, அலுவலக பொறுப்பாளர் பூபாலன், பிரின்ஸ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.